## தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகம் - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீண்டெழும் செலவினமான ரூபா 273,818 தொகை மூலதனச் செலவினமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 63,362 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்கள் மூதனமாக்கப்பட்டு அதற்காக ரூபா 5,280 தொகையான பெறுமானத்தேய்வு ஏற்பாடும் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 71,348 கூட்டுத்தொகையான விடயங்கள் நிலையான சொத்தாகக் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 நிறுவனத்தைத் தொடர்ந்து பேணுதல்

நிறுவனத்தில் முன்னைய ஆண்டின் போது தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 12,174,553 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அது ரூபா 2,819,132 வரை குறைவடைந்திருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 9,355,421 இனால் குறைவடைந்தமையினால் அது நிறுவனத்தின் நிலைத்திருக்கும் தன்மைக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் | | |
| (i) | நி.பி 231(1) | இயலுமானவரை ஏனைய பதிவேட்டைப் பார்க்காமல் சரி பிழை பார்க்கக்கூடிய வகையில் ஒவ்வொரு சேவை தொடர்பான பூரணமான விபரங்களும் சகல உறுதிச் சீட்டுக்களிலும் குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்கள் தெரிவுச் செவ்வைகளின் போது வெளிப்படுத்தப்பட்டது. |
| (ii) | நி.பி 264 | உறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்ட அண்ணளவான தொகை கிடைக்கப்பெற்றமை குறித்து உரியவரிடமிருந்து பெறப்பட்ட பற்றுச்சீட்டின் மூலம் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் 11 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,314,590 பெறுமதியான கொடுப்பனவுகள் தொடர்பாக பற்றுச்சீட்டு பெறப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நி.பி 395(ஏ) | வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரித்தல், சேகரிக்கின்ற காசு வங்கியில் வைப்புச் செய்தல், காசோலை எழுதுதல், காசேட்டை பேணுதல் போன்ற செயற்பாடுகள் ஒரு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப் பட்டிருந்தது. |

(ஆ) சுற்றுநிருபம்

| | | |
|---|---|---|
| (i) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.3.1 (அ) வழிகாட்டி | அகலவத்தை அலுவலகத்தில் சிற்றுண்டிச் சாலையை நிர்மாணிப்பது தொடர்பாக மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிராததுடன் பெறுமதி ரூபா 250,000 இனை விஞ்சுகின்ற வேலைகளுக்கான ஒப்பந்தங்களுக்காக முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும் அதற்காக உடன்படிக்கை கைச்சாதிடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.6 ஆம் வழிகாட்டி | ஒப்பந்தத்தின் வழுக்களின் பொறுப்புக் கால எல்லை முடிவடையும் போது குறித்த பணத்தொகையை நிறுத்தி வைக்க வேண்டிய போதிலும் சிற்றுண்டிச்சாலை நிர்மாணத்தின் ஒப்பந்தத்திற்காக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 2011 ஏப்ரல் 18 ஆந் திகதி PAYE/Tax/01/2011 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சுற்றுநிருபத்தின் 2 ஆம் பந்தி | சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் உழைக்கும் போதே செலுத்தும் வரி கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவக செயற்பாடுகளின் பின்னரான நிதி விளைவுகள் ரூபா 444,839 பற்றாக்குறையானதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 997,495 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான வருமானம் 12 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும் செலவினங்கள் 23 சதவீதத்தினால் அதிகரித்தமை இதற்குக் காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளுக்குரிய 17 நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

(அ) பொருட்பதிவேட்டு பொருட்கள் இலக்கமிடப்பட்டு ஒவ்வொரு பிரிவிற்காகவும் தனியான பொருட் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காக குறிப்பிட்ட திகதிகளில் பங்களிப்புப் பணம் செலுத்தாத இரண்டு சந்தர்ப்பங்களின் போது ரூபா 4,668 தொகையான தண்டப் பணம் செலுத்த வேண்டியேற்பட்டது.

(இ) நிறுவனத்தின் மூலம் தீவு முழுவதும் பரவலாகப் பேணப்படுகின்ற II ஆம் III ஆம் நிலை மொழி இயலுமையை முன்னேற்றும் பாடநெறிக்காக சமூகமளித்த 80 சதவீதமானோர் பாடநெறியின் இடையிலேயே விலகியிருந்தமையும் பங்குபற்றும் உத்தியோகத்தர்களை தொடர்ந்து பங்குபற்றச் செய்வதற்கு முறையான வேலைத் திட்டமொன்று அமுல்படுத்தப்படாமையினால் அரச சேவையிலுள்ளவர்களின் மொழியை அபிவிருத்தி செய்வதற்காக செய்யப்பட்ட பாரியளவிலான பணத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்ள முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே நடாத்தப்படுகின்ற மொழி வகுப்புக்கள் வெற்றிகரமானதாக நடாத்தப்படுகின்றதா என்பதை மதிப்பீடு செய்யும் முறைமையொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 பதவியணியினர் நிருவாகம்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிறுவனத்தின் பதவியணியினரில் இரண்டு பதவிநிலை பதவிகளும் பதவிநிலையற்ற பதவிகளில் இரண்டு வெற்றிடங்களும் காணப்பட்டதுடன் விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| பதவிகள் | அங்கீரித்த பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (அ) நிறைவேற்றுத்தரம் | 09 | 07 | 02 |
| (ஆ) நிறைவேற்றுத்தரமற்ற | 09 | 07 | 02 |
| (இ) ஏனையோர் | 07 | 07 | - |
| மொத்தம் | 25 | 21 | 04 |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**செயல்நடவடிக்கைத் திட்டம்**

நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ஒவ்வொரு செயற்பாடுகள் தொடர்பாகவும் அந்தந்த பிரிவுகளில் முகாமையாளர்களின் பொறுப்புக்கள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) வாகனப் பயன்பாடு

(ஆ) ஒப்பந்த நிர்வாகம்

(இ) நூலக நிர்வாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஊ) கணக்கீடு

(எ) நிதிக் கட்டுப்பாடு